1994 நவம்பர் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண். 71, திரு. சி. சுவாமிநாதன், இருக்கையில் இல்லை.*

வினா எண் 72, திரு வி. கே. சின்னசாமி, மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர்.

72—

தமிழ்த் திரைப்படங்களை ஊக்குவிக்கத் திட்டம்

***35145**–**திரு. வி. கே. சின்னசாமி:**

மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தமிழ்த் திரைப்படங்களுக்கு மொழி மாற்றம் செய்யப்பட்ட திரைப்படங்கள் போட்டியாக அமைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், தமிழ்த் திரைப்படங்களை ஊக்குவிக்கும் வகையில் வரி விதிப்பதில் வேறுபாடு ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி, வணிக வரித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம், இதனை அரசு அறியும்.

(ஆ) வரி விதிப்பில் வேறுபாடு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

திரு. வி.கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வரிவிதிப்பில் வேறுபாடு ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அறிவித்திருக்கிறார்கள். அப்படியென்றால் எந்த வகையில் அந்த வரிவிதிப்பில் வேறுபாடு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதையும் அது எப்போது உடனடியாக அமுலுக்கு வரும் என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் திரைப்படங்ளை ஊக்குவிக்கும் வகையில் பிற மொழிகளிலிருந்து மாற்றம் செய்யப்பட்ட திரைப்படங்களுக்கு வரி விதிப்பில் 10 புள்ளிகள் கூடுதலாக வரி விதிக்க 1994–95–ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் தெரிவித்துள்ளவாறு அரசு சட்டத் திருத்தத்தைக்

கொண்டுவந்திருக்கிறது. அந்த சட்டத் திருத்தத்தின்படி 1 செப்டம்பர் 1994 முதல் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த வரி விதிப்பின் வேறுபாடுகளையும் அது எப்போது அமல்படுத்தப்பட்டது என்பதையும் அறிவித்திருக்கிறார்கள். ஆனால், அந்த வரிவிதிப்பின் வேறுபாட்டால் மட்டும் எப்படி அவர்களிடையே ஏற்படுகின்ற போட்டி தவிர்க்கப்படும் என்பதை அமைச்சர் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சினிமாத் துறையில் நுணுக்கங்களைக் கையாண்டு ரசிகர்களை வசீகரிக்கும் வகையில் திரைப்படங்களைத் தயாரித்து வெளியிடுகிறார்கள். ரசனைக்கு ஏற்ப திரைப்படங்கள் விமரிசையாக ஓடும். சினிமா தியேட்டர் அதிபர்கள் எந்தப் படத்தைப் போட்டால் இலாபகரமாக இருக்குமோ அந்தப் படத்தைத்தான் திரையிடுவார்கள். ஆனால் தமிழிலே குறைந்த முதலீட்டில் தயாரிக்கப்படும் திரைப்படங்களை ஊக்குவிக்கவும், காப்பாற்றவும், அந்தத் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு நிரந்தர நிலையை ஏற்படுத்தித் தர வேண்டும் என்ற உன்னத நோக்கில் இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் அதனை ஆய்வு செய்து பிற மொழியில்-தமிழ் மொழி அல்லாது பிற மொழிகளில் தயாரிக்கப்பட்ட படங்களைத் தமிழகத்தில் அதிகமாக அனுமதிப்போமானால் இங்கே தயாரிக்கப்படுகின்ற திரைப்படங்கள் நசிந்துவிடும் என்ற நல்ல நோக்கத்துடன் இந்த வரி வேறுபாடுகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதனால் ஓரளவுக்குத்தான் வெளி மாநில வேற்று மொழித் திரைப்படங்களை தமிழகத்தில் ‘டப்’ செய்து திரையிடுவதைத் தடுக்க முடியும். திரையரங்கு உரிமையாளர்கள் வேற்று மொழியில் தயாரிக்கப்பட்டு ‘டப்’ செய்த படங்களை தமிழகத்தில் திரையிடும்போது அதிக இலாபம் கிடைக்கிறது. குறைந்த விலைக்கு வாங்கித் திரையிடப்படுவதனால், அந்த ஆதாயத்தைக் குறைப்போமேயானால், தமிழில் தயாரிக்கப்பட்ட, சாதாரணமாக குறைந்த முதலீட்டில் தயாரிக்கப்பட்ட படங்களைத் திரையிடுவதாலும், அந்த ஆதாயம் இருக்கிறது என்ற எண்ணத்தில், தமிழில் தயாரிக்கப்பட்ட படங்களை அதிகமாகத் திரையிடுவார்கள் என்ற எண்ணத்தில்தான்

1994 நவம்பர் 9]

வேற்று மொழியில் தயாரிக்கப்பட்டு 'டப்' செய்யப்பட்ட படங்களுக்கு 10 புள்ளிகள் கூடுதலாக வரி விதிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதன்மூலம் திரையரங்கு உரிமையாளர்கள் சாதாரணமாகக் குறைந்த முதலீட்டில் தயாரிக்கப்பட்ட தமிழ்த் திரைப்படங்களை திரையிடுவதில் ஆர்வமாக முனைவார்கள் என்ற நம்பிக்கை அரசுக்கு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஏ.கே. சி. சுந்தரவேல்.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்த் திரைப்படங்கள் தமிழ் நாட்டில் மட்டும்தான் திரையிடப்படுகின்றன. சில படங்கள்தான் மொழி மாற்றம் செய்யப்பட்டு மற்ற மாநிலங்களிலே திரையிடப்படுகின்றன. ஆனால் இந்தித் திரைப்படங்கள் எல்லா மாநிலங்களிலும் திரையிடப்படுகின்றன. ஆகவே தமிழகத்தில் ஓடும் இந்தித் திரைப்படங்களுக்கு மிகக் கூடுதல் வரியை விதித்து தமிழ்ப் படங்களைக் காப்பாற்ற அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொழியை மட்டும் அடிப்படையாக வைத்துக்கொண்டு திரைப்படங்களுக்கு வரி விதிப்பதில் வேறுபாடு ஏற்படுத்த முடியுமா என்பதை ஆய்வு செய்ய வேண்டும். அதே நேரத்தில் இந்தித் திரைப்படம் எல்லா மாநிலங்களிலும் ஓடுகிறது என்று சொன்னால், தென் இந்தியாவைத் தவிர பெரும்பாலான மாநிலங்கள் இந்தி பேசுகின்ற மக்கள் வாழ்கின்ற மாநிலங்களாக இருக்கின்ற காரணத்தினால் அது எல்லா மாநிலங்களிலும் ஓடுகிறது. தமிழ்த் திரைப்படம் தமிழ்நாட்டைத் தவிர வேறு இடத்தில் ஓடவில்லை என்பதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. கர்நாடகத்திலும், ஆந்திரத்திலும், இன்னும் தென் இந்தியாவிலும் பிரபலமான நடிகர்கள் நடித்தத் திரைப்படங்கள் விமரிசையாக ஓடிக்கொண்டிருக்கின்றன. தமிழ்த் திரைப்படங்களும் 'டப்' செய்யப்பட்டு தென்னிந்தியாவில் திரையிடப்படுகின்றன என்ற தகவலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 73, திரு. தி. சாத்தையா, இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. இரா. தாமரைக்கனி. இதில் ஸ்ரீவில்லிபுத்தூரும் அடங்கும். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.